## பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

செ.வெ.எண். 63 நாள்: 30.03.2025

**மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், அண்ணாநகர் மண்டலத்திற்குட்பட்ட திருநகர் பகுதியில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதிகளின் கீழ் ரூ.50 இலட்சம் மதிப்பில் இறகுப்பந்து உள்விளையாட்டு அரங்கத்தினைத் திறந்து வைத்து, ரூ.30 இலட்சம் மதிப்பில் சென்னைக் குடிநீர் வாரியத்தின் பயன்பாட்டிற்காக ஜெட்ராடிங் இயந்திரம் பொருத்தப்பட்ட வாகனத்தினை பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தயாநிதி மாறன் அவர்கள் இன்று (30.03.2025) அண்ணாநகர் மண்டலம், வார்டு-95, வில்லிவாக்கம், புதிய ஆவடி சாலை, திருநகர் பகுதியில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.50 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய இறகுப்பந்து உள்விளையாட்டு அரங்கத்தினை பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.30 இலட்சம் மதிப்பில் சென்னைக் குடிநீர் வாரியத்தின் பயன்பாட்டிற்காக அண்ணாநகர் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் நீரை வெளியேற்றும் பணிகளை மேற்கொள்ளும் வகையில் ஜெட்ராடிங் இயந்திரம் பொருத்தப்பட்ட வாகனத்தினை பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா, வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.அ.வெற்றியழகன், மண்டலக் குழுத் தலைவர் திரு. கூ.பி. ஜெயின், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி சுதா தீன தயாளன், திரு.டி.வி. செம்மொழி, திருமதி லதா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**